# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

************************

## பாகிஸ்தானின் முயற்சி முறியடிப்பு - உரிய முறையில் இந்தியா பதில்

2025 மே 07 அன்று, ஆபரேஷன் சிந்தூர் குறித்த செய்தியாளர் மாநாட்டில், தனது பதில் நடவடிக்கைகள் மிகுந்த அவதானத்துடன் குறிப்பிட்ட அளவில் கட்டுப்பாட்டுடனும் எந்தவிதமான அத்துமீறலுமின்றி மேற்கொள்ளப்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் இராணுவ நிலைகள் குறிவைக்கப்படவில்லை என இந்தியா தனது பதிலை விளக்கமாக எடுத்துரைத்துள்ளது. இந்திய இராணுவ இலக்குகள் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் உரிய பதில் வழங்கப்படும் என்றும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

2. 2025 மே 07-08 இரவு, வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள அவந்திபுரா, ஸ்ரீநகர், ஜம்மு, பதான்கோட், அமிர்தசரஸ், கபுர்தலா, ஜலந்தர், லூதியானா, ஆதம்பூர், பட்டிண்டா, சண்டிகர், நல், பலோடி, உத்தரலாய் மற்றும் பூஜ் உள்ளிட்ட பல இராணுவ இலக்குகளை ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி பாகிஸ்தான் தாக்க முயன்றது. ஒருங்கிணைந்த எதிர் தடுப்பு அமைப்பு மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளால் இவை தடுக்கப்பட்டன. பாகிஸ்தானின் தாக்குதல்களை நிரூபிக்கும் இந்த தாக்குதல்களின் சிதைவுகள் தற்போது பல இடங்களில் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன.

3. இன்று(8) காலை இந்திய ஆயுதப்படைகள் பாகிஸ்தானின் பல இடங்களில் உள்ள வான் பாதுகாப்பு ரேடார்களையும், ஏனைய அமைப்புகளையும் இலக்குவைத்தன. பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அதேபாணியில் இந்தியா பதில் வழங்கியுள்ளது. லாகூரில் உள்ள ஒரு வான் பாதுகாப்பு அமைப்பு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த முறையில் அறியப்படுகிறது.

4. ஜம்மு காஷ்மீரில் உள்ள குப்வாரா, பாரமுல்லா, உரி, பூஞ்ச், மெந்தர் மற்றும் ரஜோரி பகுதிகளில், மோட்டார்கள் மற்றும் கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தி கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகே புறத் தூண்டுதலின்றி மேற்கொள்ளும் தாக்குதல்களை பாகிஸ்தான் தீவிரப்படுத்தியுள்ளது.

5. பாகிஸ்தானின் தாக்குதல்கள் காரணமாக மூன்று பெண்கள் மற்றும் ஐந்து குழந்தைகள் உட்பட பதினாறு அப்பாவி உயிர்கள்

பலியாகியுள்ளன. இங்கும், பாகிஸ்தானின் மோட்டார் & பீரங்கித் தாக்குதலை நிறுத்த இந்தியா பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

6. பாகிஸ்தான் இராணுவம் நிறுத்தும் வரை, பதற்றத்தைத் தவிர்ப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இந்திய ஆயுதப்படைகள் மீண்டும் வலியுறுத்துகின்றன.

***********

**கொழும்பு**
**8 மே 2025**

**மூலம்:**
https://pib.gov.in/PressReleseDetail.aspx?PRID=2127670&reg=3&lang=1